**உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**SC No : 200/2020**

| | |
|---|---|
| பெயர் | .. ஜீடி(அசா 7) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம்2026 ஆண்டு ஜீன் மாதம் 30ம் நாள் இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் சுரேஷ் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**.எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நாலட்டின்புதூர் காவல் நிலைய ஆய்வாளாராக பணியில் இருந்த போது இதச பிரிவுகள் 294(பி), 307, 506(2) பதிவுசெய்யப்பட்ட குற்ற எண். 38/2019 வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்கு எடுத்துகொண்டு 19.02.2019ம் தேதி சம்பவ இடம் காலை 10.30மணிக்கு சென்று சாட்சிகள் ராமலிங்கம் மற்றும் முனியசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். வழக்கு சம்பந்தப்பட்ட புகார் மனு **அ.சா.ஆ.1**. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2**. பார்வை மகஜர் **அ.சா,.ஆ.3**. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**. மேற்கண்ட இரண்டு சாட்சிகளிடம் கையெப்பம் பெற்றேன். அவர்களை விசாரித்து தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இந்த வழக்கில் சம்பந்தபட்ட சாட்சிகள் செண்பகையா, ஜெகதீஸ்வரி, முருகேஸ்வரி, ராஜசேகர், அழகர்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து தனித்தனி வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும் வழக்கு பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் அந்தோனி திலிப் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரியை தேடி வத்ந நிலையில் அன்றைய தினம் 13.30 மணிக்கு கெச்சிலாபுரம் கிராம பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்தேன். பின்னர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சிகள் சித்ரா தேவி, மற்றும் சென்னப்பன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்தில் சாட்சிகள் இருவரிடமும் கையெழுத்து பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலுத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5**. பின்னர் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை அவரது வீட்டு சமையல் அறையில் எடுத்து ஆஜர் படுத்தியதை, அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அத்தாட்சி ஆவணம் **அ.சா.ஆ.6**. கைப்பற்றபட்ட அருவாள் **சா.பொ.1**. பின்னர் கைது செய்யப்பட்ட எதிரியையும் கைப்பற்ற பொருளையும் நிலையம் ஆஜராகி எதிரயை தக்க வழி காவல் துணையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்ற பட்ட வழக்கு சொத்தை பொருத்து படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.7**. மேலும் ஒப்புதல்வாக்குமூல சாட்சிகள் இருவரிடமும் தனித்தனி வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் கொடுத்த வாக்குமூலங்கள் அடிப்படையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(பி),

307, 506(2) படி இறுதி அறிக்கை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை:(எதிரி தரப்பில்)</u>**

நான் சொன்ன மாதிரி. சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்றதாக கூறுவதும், சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாக கூறுவதும், எதிரி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பபித்து அருவாளை கைப்பற்றியதாக கூறுவதும் உண்மை இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எனது குற்ற இறுதி அறிக்கை சட்டபிழையானது என்றாலும் சரியல்ல. வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை: இல்லை.</u>**

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
அமர்வு நீதிபதி,
கோவில்பட்டி.